



தூத்துக்குடி மாவட்டம் ஆதிச்சநல்லூர் தொல்லியல் அருங்காட்சியகம் அடிக்கல் நாட்டு விழாவில் ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமை தாங்கினார். தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் முன்னிலை வகித்தார். அருகில் மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மாநில வர்த்தகர் அணி துணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ். உமரிசங்கர், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் மரு.கி.செந்தில்ராஜ், மாவட்ட பஞ்சாயத்து தலைவர் அ.பிரம்மசக்தி மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# ஒன்றிணைந்து உழைப்போம்! வெற்றி பெறுவோம்!

## முதல்வர் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி

நாடாளுமன்றத் தேர்தலுக்கு நாம் இப்போதே தயாராகிவிட்டோம். வரும் 2024 நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் 40-க்கு 40 இடங்களையும் தி.மு. கழக தலைமையிலான கூட்டணி கைப்பற்றும் வகையில் நம்முடைய பரப்புரையைத் தொடங்கியிருக்கிறோம். அதன் ஒரு பகுதியாக, வாக்குச்சாவடிதோறும் களப்பணியாற்றும் வகையில் வாக்குச்சாவடிப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

**வாக்குச்சாவடிப் பொறுப்பாளர்களின் பணிகள்!**

ஒவ்வொரு வாக்குச்சாவடிப் பொறுப்பாளர் மற்றும் உறுப்பினர்களின் தீவிரமான களப் பணிதான் கழகத்தின் மாபெரும் வெற்றிக்கு அடித்தளமாக அமையும். கழகத்தின் வியூகத்தை வெற்றியடையச் செய்வது உங்கள் ஒவ்வொருவரின் கடமை. எனவே, வாக்குச்சாவடிப் பொறுப்பாளர்கள் உறுப்பினர்கள் நியமனம் மற்றும் அவர்கள் பணிகள் குறித்து மாவட்டச் செயலாளர்கள் அதிக முக்கியத்துவம் கொடுத்து செயல்பட வேண்டும். வாக்குச்சாவடிப் பொறுப்பாளர்கள் தேர்தலுக்கு ஆயத்தப்படுத்தும் விதமாக ஒவ்வொரு மண்டலமாக பயிற்சிக் கூட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டு, அதன்படி ஒவ்வொரு மண்டலமாக பயிற்சி பாசறைக் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது.

முதல்கட்டமாக, டெல்டா மாவட்டங்களுக்கான வாக்குச்சாவடிப் பொறுப்பாளர்கள் பயிற்சிப் பாசறைக் கூட்டத்தை திருச்சியில் வெற்றிகரமாக நடத்தி முடித்திருக்கிறோம். அது, அந்த மாவட்டச் செயல்வீரர்களுக்கு மட்டுமல்ல, எல்லோரையுமே உற்சாகப்படுத்தும் வகையில் இருந்தது. வரும் 17-ஆம் தேதி தென் மண்டல மாவட்டங்களுக்கான பயிற்சிப் பாசறைக் கூட்டம் ராமநாதபுரத்தில் நடைபெற இருக்கிறது. தென் மாவட்டங்களின் மாவட்டக் கழகச் செயலாளர்கள் வாக்குச்சாவடி பொறுப்பாளர்களின் கூட்டங்களை நடத்தி அவர்களை அழைத்து வருவதற்கான பணிகளை உடனடியாகத் தொடங்க வேண்டும்.

இன்னொன்று ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்! வாக்குச்சாவடிப் பொறுப்பாளர்களுக்கான பாசறைக் கூட்டங்களை நடத்துவதோடு நம்முடைய வேலை முடிந்துவிடாது. வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான பரப்புரையின் தொடக்கம் மட்டும்தான் அது! அதனால், நாடாளுமன்றத் தேர்தலுக்கான அடுத்தகட்டப் பணிகளையும் தொடங்க வேண்டும்.

கழகத்தின் சாதனைகள் மற்றும் கழக அரசின் நலத்திட்டங்களை மக்களிடம் எடுத்துச் செல்வதற்கான கருவியாக வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் செயல்பட வேண்டும். ஒவ்வொரு நூறு வாக்காளருக்கும் ஒரு பொறுப்பாளர் என்று வாக்குச்சாவடி குழு உறுப்பினர் (BLC) நியமனம் செய்கிற பணிகளும் எல்லா மாவட்டங்களிலும் நிறைவடைந்திருக்கிறது.

வாக்குச்சாவடிப் பொறுப்பாளர்களைப் போலவே, எல்லா வாக்குச்சாவடி குழு உறுப்பினர்களையும் தலைமைக் கழகத்திலிருந்து அழைத்து சரிபார்க்கிற பணியை மேற்கொள்ளச் சொல்லியிருக்கிறேன். சரிபார்ப்புக்குப் பின், வாக்குச்சாவடி குழு உறுப்பினர்களில் (BLC) ஏதாவது மாற்றங்கள் இருந்தால் அதையும் செய்து முடித்து, எல்லா வாக்குச்சாவடிகளிலும் BLA2, BLC பணிகளை முழுமையாக முடித்து அவர்களுக்கான அடுத்தடுத்த பணிகளைத் தொடங்க வேண்டும்.

**வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணி உடனடியாகத் தொடங்குக!**

ஒவ்வொரு வாக்குச்சாவடிக் குழுவிலும் தங்களுக்குரிய முரண்பாடுகள் எதுவும் இல்லாமல், ஒற்றுமையாக வேலை செய்கிற வகையில் எல்லாச் செயல்பாடுகளும் இருக்க வேண்டும். டெல்டா மாவட்டங்களில் பாசறைக் கூட்டம் முடிந்துவிட்டதால், அந்த மாவட்டங்களில் ஒவ்வொரு வாக்குச்சாவடி வாரியாக நூறு வாக்காளர்களைப் பிரிக்கிற பணி, வாக்காளர்களின் விவரங்களைச் சேகரிக்கும் பணி மற்றும் வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளை சரிபார்க்கும் வேலையை உடனடியாகத் தொடங்க வேண்டும். அதற்கான முன்னெடுப்புகளை மாவட்டச் செயலாளர்கள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பா.ஜ.க.வைப் பொறுத்தவரையில் இது அவர்களுக்கு வாழ்வா சாவா - என்ற தேர்தல்! மீண்டும் ஆட்சியைப் பிடிக்க எதையும் செய்வார்கள். தமிழ்நாட்டில் அவர்கள் எடுக்கின்ற முயற்சிகள் எல்லாம் தோல்வி அடைந்து இருக்கிறது. அதனால் கோபம் அதிகமாகும். நம்மை நோக்கிப் பாய்வார்கள்.

கடந்த காலங்களில், இதுமாதிரி பல தடைகளைச் சமாளித்துத்தான் நம்முடைய கழகம் வெற்றி பெற்று இருக்கிறது. இந்த முறையும் நாம் முழுமையான வெற்றியைப் பெற வேண்டும்! அதற்காக அனைவரும் ஒன்றிணைந்து உழைப்போம் எனக் கூறி நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு அவர் உரையாற்றினார்.

> **தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா என்று சொல்கிறோம் என்றால், அதுவும் தேர்தல் பரப்புரையில் ஒரு அங்கம்தான். தலைவர் கலைஞர் பெயரைச் சொல்லி பொதுமக்களின் கவனத்தை நம்மை நோக்கி ஈர்த்தாக வேண்டும். மக்களை ஈர்க்க கலைஞரே காந்தம்போல் நமக்கு உதவுவார். அவரால் பயன்பெறாத தரப்பினரே இல்லை. அதனால், அந்த அடிப்படையில் கொள்கை விழாக்களாக இவற்றை நடத்த வேண்டும்.**



மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம் – கார்சேரி கிராமத்தில் புதிய நியாய விலைக்கடையை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி பயன்பாட்டுக்கு தொடங்கி வைத்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மா.செள.சங்கீதா, சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் செ.சரவணன், மாவட்ட வருவாய் அலுவலர் சக்திவேல், மாவட்ட திட்டக்குழுத் தலைவர் மாவட்ட ஊராட்சித்தலைவர் திருமதி.சூரியகலா கலாநிதி, கிழக்கு ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் திருமதி.மணிமேகலை ஆகியோர் உடன் உள்ளனர்.

### 3 ஏக்கர் நிலப்பரப்பில்

# ஆதிச்சநல்லூரில் உலகத் தரம் வாய்ந்த அருங்காட்சியகப் பணிகள்!

## ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீத்தாராமன் - கனிமொழி கருணாநிதி எம்.பி. துவக்கி வைத்தனர்!

தூத்துக்குடி, ஆக. 6-
தூத்துக்குடி மாவட்டம் ஆதிச்சநல்லூரில் 5 ஏக்கர் நிலப்பரப்பில் அமையும் உலக தரம் வாய்ந்த அருங்காட்சியகத்திற்கு ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீத்தாராமன், கனிமொழி கருணாநிதி எம்.பி ஆகியோர் அடிக்கல் நாட்டி பணிகளைத் தொடங்கி வைத்தனர்.

தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் அருகே உள்ள ஆதிச்சநல்லூரில் உலகத்தரம் வாய்ந்த அருங்காட்சியகம் அமைக்கப்படவேண்டும் என தி.மு.க. சார்பில் நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பப்பட்டு வந்தது. இதனையடுத்து, ஆதிச்சநல்லூரில் உலகத் தரம் வாய்ந்த அருங்காட்சியகம் அமைக்கப்படும் என்று கடந்த 2020ஆம் ஆண்டு ஒன்றிய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது. அதன் ஒரு பகுதியாக ஆதிச்சநல்லூர் பரம்பு பகுதியில் கடந்த 2021ம் ஆண்டு மத்திய தொல்லியல் துறை சார்பில் அகழாய்வுப் பணிகள் தொடங்கின.

அகழாய்வில் 100க்கும் மேற்பட்ட முதுமக்கள் தாழிகள், இரும்பு பொருட்கள், தங்க நெற்றி பட்டயம், சங்ககால வாழ்விடம் பகுதிகள் ஆகியவை கண்டெடுக்கப்பட்டன. இதனிடையே, மண்பாண்டப் பொருட்கள் உள்ளிட்ட பல்வேறு பொருட்களை அந்த இடத்தில் உள்ள நிலையிலேயே பார்வையிடுவதற்கு வசதியாக அமைக்கப்பட்டுள்ள ஆன் சைட் மியூசியம் திறப்பு விழா மற்றும் ஐந்து ஏக்கர் பரப்பளவில் உலகத் தர வாய்ந்த அருங்காட்சியகம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று நடைபெற்றது. இதில் ஒன்றிய நிதித்துறை அமைச்சர் நிர்மலா சீத்தாராமன், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி ஆகியோர் கலந்து கொண்டு ஆன் சைட் மியூசியத்தைத் திறந்து வைத்து அதனைப் பார்வையிட்டனர்.

### ஆகஸ்ட் - 7 முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 5 ஆம் ஆண்டு நினைவு தினம்:

# தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அமைதி ஊர்வலம்!

## மாவட்டச் செயலாளர் திருமதி. பி.கீதாஜீவன் அறிக்கை!

தூத்துக்குடி, ஆக. 6-
தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் பி.கீதாஜீவன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தி.மு.கழகத்தை தோற்றுவித்த பேரறிஞர் அண்ணாவின் மறைவிற்கு பின் இந்த இயக்கத்தை கட்டி காத்து 5 முறை தமிழக முதல்வராக இருந்து தமிழகத்தை முன்னேற்றப் பாதைக்கு கொண்டு சென்றவர் முத்தமிழறிஞர் கலைஞர் ஆவார்.

தன்னுடைய கடைசி காலம் வரை தமிழ், தமிழர் நலன், சமத்துவம், சமூக நீதி என்று பாடுபட்டவர். அவர் நம்மைவிட்டுச் சென்றாலும் அவர் காட்டிய வழியில் கொள்கையில் உறுதியோடு தி.மு.கழக தலைவர் - தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் இயக்கத்தை வழி நடத்தி வருகிறார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 5 வது நினைவு தினம் நாளை (ஆகஸ்ட் - 7) வருகிறது. காலை 9.00 மணி அளவில் தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தூத்துக்குடி புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள அருள்மிகு ஸ்ரீபோத்தி ஸ்ரீபோத்தி விநாயகர் ஆலயம் முன்பிருந்து மாவட்டச் செயலாளராகிய (பி.கீதாஜீவன்) என்னுடைய தலைமையில், விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி.மார்க்கண்டேயன், தூத்துக்குடி மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ஆனந்தசேகரன், மாநகர மேயர் ஜெகன் பெரியசாமி, மாநில மீனவரணி துணைச் செயலாளர் சி.புளோரன்ஸ், மாநில நெசவாளர் அணி துணைச் செயலாளர் ஏ.சி. ஜெயக்குமார் ஆகியோர் முன்னிலையில் ஊர்வலமாகச் சென்று மாவட்ட தி.மு.க அலுவலகமான கலைஞர் அரங்கம் முன்பு அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட இருக்கிறது.

இந்நிகழ்ச்சியில் தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாவட்டக் கழக நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு, உறுப்பினர்கள், மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், கிளைக்கழக செயலாளர்கள், நிர்வாகிகள், வார்டு கழக செயலாளர்கள், பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக தொண்டர்கள் அனைவரும் பெருந்திரளாகக் கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.



அதுபோல தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், ஊராட்சி மற்றும் கிளைக்கழகங்கள், வார்டுகள் தோறும் அவரது திருவுருவப் படத்தை வைத்து அஞ்சலி செலுத்தவும், கழகத்தின் கொள்கை விளக்கப் பாடல்களை ஒலிப்பரப்பிடவும் கேட்டுக் கேட்டுக் கொள்கிறேன். அந்தந்த பகுதிகளில் நடைபெறும் மலர் அஞ்சலி நிகழ்ச்சியில் அந்தந்த பகுதிக்கு உட்பட்ட கழக நிர்வாகிகள், தொண்டர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

